**ஏப்ரல் 29**

## *புனித சியன்னா கத்தரின் (1341 – 1390)*

சியன்னாவில் பிறந்த இவள் ஏழைகளையும் துன்புற்றவர்களையும் சிறு வயதிலிருந்தே மிக மிக அன்பு செய்தாள். இவளுடைய தந்தை பல பீப்பாய்களில் இரசம் வைத்திருந்தார். ஒரு பீப்பாயில் இருந்த இரசத்தை ஏழைகளுக்கு வழங்க இவள் தன் தந்தையிடம் அனுமதி கேட்டுப் பெற்றாள். எடுக்க எடுக்க இரசம் குறையவே இல்லை. வீட்டின் பிரதான வேலைக்காரன் ஒரு மாதத்திற்கு பின் அதைத் திறந்து பார்த்தான். இரசம் அப்படியே இருந்தது. இவள் தனது கன்னிமையை கடவுளுக்கு அர்ப்பணம் செய்தவள். மண முடிக்க இவள் இணங்காததால், வீட்டில பல உபத்திரவங்கள் கொடுத்தனர். இறுதியில் பெற்றோர் இவளின் விருப்பப்படியே விட்டுவிட்டனர். 18-ஆம் வயதில் புனித சுவாமிநாதரின் மூன்றாம் சபையில் சேர்ந்தாள். கொள்ளை நோயின் போது இவள் வீரத்துடன் நோயாளிகளுக்கு சேவை செய்தாள். இரு குருக்களுக்கு புதுமையாக சுகம் பெற்றுக் கொடுத்தாள். தங்களுக்காக செபிக்க மறுத்த கன்னெஞ்சரான பாவிகளுக்காக இவள் இடைவிடாது செபித்து தவம் செய்தாள். இவள் மனந்திருப்பிய பாவிகளின் பாவசங்கீர்த்தனத்தைக் கேட்க போதிய குருக்கள் இல்லை. எனவே பாப்பானவர் இவள் குணப்படுத்திய இரு குருக்களையும் அதற்கென நியமித்தார். அவ்விரு குருக்களும் இரவும் பகலும் பாவசங்கீர்த்தனம் கேட்டார்கள். அத்தனை ஏராளமான பாவிகளை இவள் மனந்திருப்பினாள். 28-ஆம் வயதில் இவள் திருக்காய வரம் பெற்றாள். எனினும் இவள் கெஞ்சிக் கேட்டமையால் காயங்கள் பிறர் கண்ணில் தெரியாமல் இருக்க ஆண்டவர் வரமளித்தார். இவளுக்கு பயங்கரத்துக்குரிய பாவ சோதனைகள் வந்தது. நரக பாதாளத்தில் தான் விழ இருப்பதாக நினைப்பாள் என்றாலும் செபித்து தாழ்ச்சியுடனும் பணிந்த மனதுடனும், கடவுள் மீது நம்பிக்கை வைத்து, வீரத்துடன் போராடி, வெற்றி பெறுவாள், இவ்வித பயங்கர போராட்டத்திற்குப் பின் இயேசு அவளை ஒரு முறை சந்தித்தார். “என் தேவ பர்த்தாவே! நான் எல்லோராலும் கைவிடப்பட்டு போராடுகையில் நீர் எங்கு இருந்தீர்?” என்று அவள் வினவ “நான் உன்னுடன் தான் இருந்தேன்” என்ற பதில் கிடைத்தது. “அந்த அசுத்தத்தின் மத்தியிலா நீர் இருந்தீர்?” என்று அவள் கேட்டாள். “இந்த அசுத்த சோதனைகள் உனக்கு வெறுப்பைக் கொடுத்தன. மன வேதனையைத் தந்தன. போராடி பேறு பலன்களை நீ சம்பாதித்தாய், வெற்றி கிடைத்தது எனது பிரசன்னத்தாலேயே” என்று ஆண்டவர் கூறினார். கர்தினால்களும், அரசர்களும் திருச்சபையில் பெரும் பிளவு உண்டு பண்ணினர். இப்பெரும் தீமையைத் தடுக்க இவள் முயன்றாள். “ஆண்டவரே! என் உடலில் சகல பகுதிகளும் என் எலும்புகள் அனைத்தும் நொறுக்கப்பட்டு தூளாகட்டும். ஆனால் உமது திருச்சபை அழகுடனும் பொலிவுடனும் ஜொலிக்கச் செய்யும்” என்று அடிக்கடி சொல்வாள். அவிஞன் நகரில் இருந்த பாப்பானவர், இவளது பெரும் முயற்சியால் உரோமைக்குத் திரும்பினார். பாப்பானவரது வேண்டுகோளுக்கு இணங்க தனது வாழ்வின் இறுதி ஆறு ஆண்டுகளை உரோமையில் செலவழித்து, திருச்சபையின் ஐக்கியத்திற்காகவும் சீர்திருத்தத்திற்காகவும் தனது உயிரையே கடவுளுக்கு பலியாகக் கொடுத்தாள். மூன்று மாதங்களாக சொல்ல முடியாத மரண அவஸ்தைப்பட்டு தனது 33-ஆம் வயதில் இறந்தாள்.

**சிந்தனை:**

“உனது பழைய பாவங்களின் நினைவு வரும் போது கடவுளது அளவற்ற இரக்கத்தை நினைத்துப் பார். பாவங்களின் நினைவு உன்னை மனந்தளரச் செய்யாது. அதற்கு மாறாக இரட்சகரின் இரக்கத்திலும் பேறு பலன்களிலும் நீ நம்பிக்கை வைக்க அது உன்னைத் தூண்டும்”. (புனித சியன்னா கத்தரீன்)

**செபம்:**

ஆண்டவரே, சத்திய திருச்சபையானது அழகுடனும், பொலிவுடனும் விளங்கச் செய்யும்.